2019 பிப்ரவரி 14]

76—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***34584—திரு. க. கார்த்திகேயன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, வானபுரம் (பகண்டை கூட்டுச் சாலை) பகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ரிஷிவந்தியம் தொகுதி, வானபுரம் (பகண்டை கூட்டுச் சாலை) பகுதியில் வேளாண் விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

77—

இலவச வீடுகள்

***26692—திரு. கே.எஸ். மஸ்தான்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2019 பிப்ரவரி 14

(அ) செஞ்சி தொகுதியில் உள்ள மூன்றாம் பாலினருக்கென வீட்டுமனைப் பட்டா வழங்கி இலவச வீடுகளைக் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வளத்தி கிராமப் புல எண் 331, 0.85.0 ஹெக்டேர் தீர்வை ஏற்படாத தரிசு நிலத்தில் மொத்தம் 0.10.0 ஹெக்டேர் நிலத்தினை நத்தமாக நில வகைமாற்றம் செய்து, 12 திருநங்கைகளுக்கு வீட்டுமனை ஒப்படை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இந்த நடவடிக்கை தற்போது மாவட்ட நிருவாகத்தின் சார்பிலே மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

முற்பகல் 10-55

திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதி, செஞ்சி வட்டம் மற்றும் மேல்மலையனூர் வட்டம் ஆகிய இரண்டு வட்டங்களை உள்ளடக்கிய பகுதி. செஞ்சி ஒன்றியத்தில் 60 ஊராட்சிகளும், மேல்மலையனூர் ஒன்றியத்தில் 55 ஊராட்சிகளும், செஞ்சி பேரூராட்சியில் 18 வார்டுகளும், அனந்தபுரம் பேரூராட்சியில் 15 வார்டுகளும் உள்ளடக்கிய பகுதியில், நூற்றுக்கும் மேற்பட்ட திருநங்கைகள் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று நீண்ட காலமாகக் கோரிக்கையினை வைத்து வருகிறேன். செஞ்சி வட்டாட்சியர், மேல்மலையனூர் வட்டாட்சியர் ஆகிய இருவரையும் நேரடியாக அழைத்துச் சென்று அரசுக்குச் சொந்தமான இடங்கள் பலவற்றை*

2019 பிப்ரவரி 14]

காண்பிக்கின்ற நேரத்தில், இரண்டு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, மேல்மலையனூர் வட்டாட்சியர் அவர்கள் 12 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க பரிந்துரை செய்துள்ளார். அதேபோல, செஞ்சி வட்டத்தில் 26 நபர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வருவாய்த் துறை பரிந்துரை செய்துள்ளது. ஆனால், இதுவரையிலும் அது நிலுவையில் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பணிகளைத் துரிதப்படுத்தி, இரண்டு வட்டங்களில் உள்ள திருநங்கைகளுக்கு வீட்டுமனைப் பட்டா பெற்றுத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, நலிந்த பிரிவினர்களுக்கு வீட்டுமனை வழங்குவது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசினுடைய கொள்கையாகும். அந்த வகையிலே, நத்தம் புறம்போக்கு நிலமாக இருந்தால், இந்தக் கோரிக்கையை ஏற்று உடனடியாக வீட்டுமனைப் பட்டா வழங்க முடியும். கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிற நிலம், தரிசு நிலமாக இருக்கின்றது. எனவே, அதை நிலம் வகைப்பாடு மாற்றம் செய்யக்கூடிய* process *நடைபெற்று வருகிறது. ஏனென்றால், இது அரசிதழில் வெளியிடப்பட்டு, அதன் பின்னர் நத்தமாக மாற்றம் செய்யப்பட்டு, அதற்குப் பிறகு ஒதுக்கீடு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, நிலம் வகைமாற்றம் செய்யப்பட்டு 12 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதம் இருப்பவர்களுக்கும் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நத்தமாக நில வகைமாற்றம் செய்யப்பட்டு, அவர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இதுபற்றி நன்றாகத் தெரியும். அவர் ஒவ்வொரு கட்டமாக இந்த நடவடிக்கையை கூர்ந்து கவனித்து, உரிய பரிந்துரையை மாவட்ட நிருவாகத்திற்கு

அனுப்பி வருகிறார். அந்தப் பரிந்துரையை ஏற்று, துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநங்கைகளுக்கு 'திருநங்கை' என்ற பெருமை சேர்க்கின்ற வகையில் பெயரையும் சூட்டி, நல வாரியம் அமைத்து, அவர்களுக்குப் பாதுகாப்பான திட்டங்களையும் வகுத்துக் கொடுத்த, முத்தமிழறிஞர் மறைந்த முன்னாள் முதல்வர், வாழும் வள்ளுவராக மக்களிடத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். திருநங்கைகளுக்கு நல வாரியம் அமைக்கின்ற காலகட்டத்தில் அவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்காக பரிந்துரை செய்த, கழகத் தலைவர் நம்முடைய தளபதியார் அவர்களையும் வணங்குகிறேன். திருநங்கைகளுக்கு நல வாரியம் மூலமாக ஆண்டுக்கு ரூ.12,000/- உதவித்தொகை வழங்கப்படுகிறது. அதை ரூ.24,000/- ஆக உயர்த்தி, மாதந்தோறும் ரூ.2,000/- கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மானியத்தோடு ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தில் திருநங்கைகளுக்கு முழு மானியத்தோடு இலவசமாக ஸ்கூட்டர் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். திருநங்கைகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கி, பேருந்துகளில் அவர்களுக்கு தனி இருக்கைகள் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருநங்கைகளுக்கு கல்வித் தகுதியின் அடிப்படையில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், கேள்வியை சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.*

திரு. கே.எஸ். மஸ்தான்: *சுருக்கமாகப் பேசிவிடுகிறேன். இது வேண்டுகோள்தான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள், திருநங்கைகள் குறித்து பெரிய உரை மாதிரி பேசிக்கொண்டிருக்கிறீர்கள், என்ன செய்வது?*

திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர்*

அவர்களே, கேட்பதற்கு உங்களுக்கு நன்றாக இருக்கும். நீங்கள் கேட்டுப் பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமில்லை.

திரு. கே.எஸ். மஸ்தான்: கேட்பதற்கு நன்றாக இருக்கும். நான் 11,000 கேள்விகளைக் கேட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், எனக்கு நன்றாக இருக்கிறதா, இல்லையா என்பது பேச்சல்ல. எனக்கு நேரமில்லை. இன்னும் 3 கேள்விகளை நான் எடுத்துக்கொள்ள வேண்டும். இன்றுதான் கடைசி நாள். எல்லோரும் பேசுவதற்கு நான் வாய்ப்புத் தர வேண்டும். நீங்கள், கேள்வியை சீக்கிரம் கேட்டு முடியுங்கள். நான் மற்றவர்களுக்கு வாய்ப்புத் தர வேண்டும்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநங்கைகளின் கல்வித் தகுதிக்கு ஏற்ற மாதிரி, அரசு வேலைவாய்ப்பில் வயது வரம்பைத் தளர்த்தி, அவர்களுக்கு வேலை வழங்க வேண்டும். வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களுக்கு வறட்சியின் காரணமாக ரூ.2,000/-அறிவித்திருக்கிறீர்கள்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே.எஸ். மஸ்தான்: அதைத் திருநங்கைகளுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, ஆண்டுதோறும் விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்தில் கூத்தாண்டவர் கோயில் திருவிழா சித்ரா பௌர்ணமி அன்று நடைபெறுகின்றது. இந்திய அளவில் உள்ள திருநங்கைகள் அங்கே கூடுகின்றார்கள். அதற்கு மாவட்ட அளவில் விடுமுறை வழங்க வேண்டும். இதுபோன்ற பல்வேறு சலுகைகளை திருநங்கைகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய பட்டியலில் மீதி இருக்கின்ற கோரிக்கைகள் அத்தனையையும் நான் வாசித்ததாகக் கருதி பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேற்கூறிய கோரிக்கைகளை நிறைவேற்ற தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மஸ்தான், கேள்வி நேரத்தில் அப்படியெல்லாம் பதிவு செய்ய முடியாது, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீட்டுமனைப் பட்டா கேட்டார்கள். அது வருவாய்த் துறை சம்பந்தமானது. ஆனால், திருநங்கைகளுக்காக ஒரு மானியக் கோரிக்கையை முன்வைத்து அனைத்துத் துறை அமைச்சர்களையும் சேர்த்து அதனை வருவாய்த் துறையில் கேட்டால் அதற்கு நான் பதிலளிக்க இயலாது. ஆகவே, அவர் திருநங்கைகளுடைய நன்மை கருதி கோரிக்கை வைத்திருக்கின்ற காரணத்தினால், அவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்றுதான் ஒரு தீர்வு காண முடியுமேயொழிய, இதற்கு வருவாய்த் துறை மட்டும் தீர்வு காண முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்ற திசையை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும், தங்களையும் வணங்குகின்றேன். கோவை தெற்கு தொகுதிக்குட்பட்ட 70-வது வார்டில் அம்மன்குளம் என்ற பகுதியில் சுமார் 60 ஆண்டுகாலமாக 800 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அவர்கள் வசிக்கின்ற இடம் அம்மன்குளம் என்பதால், வருவாய்த் துறை அதனை குளம் என்று வகைப்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால், 1987-ல் மேதகு ஆளுநர் அலெக்சாண்டர் அவர்கள் அந்த நிலத்தை நத்தம் புறம்போக்காக மாற்றி அதில் 11 ஏக்கரில் குடிசை மாற்று வாரிய வீடு கட்டவும், மீதி 4 ஏக்கர் நிலத்தை பொதுப் பணித் துறையின் வசம் இருக்கும்படியும் அனுமதி அளித்துள்ளார்கள். ஆனால், நான் இந்த மூன்றாண்டு காலமாக அந்த இடத்திற்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்க பல முறை கேட்டுவிட்டேன். மாண்புமிகு

2019 பிப்ரவரி 14]

வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களோடு ஆலோசித்து அந்த 800 குடும்பங்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வீட்டுமனைப் பட்டாவைப் பொறுத்தவரையில் ஒப்படை செய்வதற்கு எங்கெங்கு நிலம் இருக்கின்றதோ, அங்கெல்லாம் தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனை வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியில், குடியிருப்பின் மூலமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குடியிருப்பின் மூலமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்ற நீர்நிலைப் புறம்போக்குகள், ஆட்சேபகரமற்ற புறம்போக்குகளையெல்லாம் 5 ஆண்டுகள் அவர்கள் அங்கே குடியிருந்தார்கள் என்று சொன்னால், அதனை வரன்முறை செய்து கொடுக்கலாம் என்ற திட்டத்தை அறிவித்தார்கள். ஆனால், அவை ஆட்சேபகரமற்ற புறம்போக்குகளாக இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வகைப்பாடு மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது என்ற விவரங்களையெல்லாம் சொல்லியிருக்கின்றார்கள். இது சம்பந்தமாக அரசாணை நிலை எண் 465 மற்றும் அரசாணை நிலை எண் 496 ஆகிய 2 அரசாணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அரசாணை நிலை எண் 465-ல் நீர்நிலைப் புறம்போக்கில் குடியிருப்பவர்களையும் அரசு கைவிட முடியாது என்கின்ற காரணத்தினால், தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி அவர்களுக்கு அடுக்குமாடி வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு இதே சட்டமன்றத்தில் ஏழை எளிய மக்களுடைய வயிற்றில், வாழ்வில் ஒளியேற்றி வைக்கின்ற வகையில் அந்தத் திட்டத்தை அறிவித்தார்கள். அதேபோல், ஆட்சேபகரமற்ற புறம்போக்கில் இருப்பவர்களுக்கெல்லாம், 5 ஆண்டுகள் தொடர்ந்து குடியிருந்தார்களென்றால், அரசு நிலத்தை அவர்களுக்கே சொந்தம் என்று வரன்முறைப்படுத்துகின்ற அந்தத் திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள் என்பதைச் சொல்லி,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தக் கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

முற்பகல் 11-05

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு* clarification. *விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் விழுப்புரம் மாவட்டம் என இரண்டாகப் பிரிக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றீர்கள். அதை நாங்கள் வரவேற்கின்றோம். இங்கே இருக்கின்ற சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அதில் இருக்கின்ற சிக்கல்கள் அனைத்தும் தெரியும். குறிப்பாக விழுப்புரத்திற்குப் பக்கத்தில் பேரங்கியூர் உள்ளிட்ட கிராமங்கள் எல்லாம் 8 கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருக்கின்றன. நீங்கள் அந்த மாவட்டத்தைப் பிரிக்கின்றபோது, பொதுவாக நாம் என்ன செய்வோம் என்றால், எந்தெந்த தாலுகாக்கள் அந்த மாவட்டத்தோடு போக வேண்டும் என்றும், எந்தத் தொகுதி, எந்த மாவட்டத்தோடு போக வேண்டும் என்ற வகையில் வட்டார அடிப்படையில் இல்லாமல், தொகுதியின் அடிப்படையில் இல்லாமல், ஒன்றிய அடிப்படையில் இல்லாமல், ஊராட்சிகளின் அடிப்படையிலே, எந்த மாவட்டம் பக்கத்திலே இருக்கிறதோ அதைக் கேட்டு அறிவோம். நீங்கள் தலைமைச் செயலகத்திலிருந்து ஓர் அதிகாரியையும் இதற்காக அனுப்பியிருந்தீர்கள். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்களும் அந்த கருத்துகளை எல்லாம் சொல்லியிருக்கிறோம். எல்லோரும் வலியுறுத்திய கருத்து இதுதான். குறிப்பாக, பேரங்கியூர், முகையூர், திருவெண்ணெய்நல்லூர் போன்ற ஊர்களெல்லாம் விழுப்புரத்திற்கு அருகிலே இருக்கின்றன. அந்த மக்களே வந்து, அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஊராட்சிகளின் அடிப்படையிலே மாவட்டங்களைப் பிரிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை நான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். அதுகுறித்து விசாரித்த அதிகாரியும் தங்களிடம் ஏதேனும் கருத்துகளைச் சொல்லியிருக்கலாம். அவற்றையும் நான் அறிய விரும்புகிறேன்.*

2019 பிப்ரவரி 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 32 வருவாய் மாவட்டங்களிலேயே மிகவும் பெரிய மாவட்டம் விழுப்புரம் மாவட்டம் என்பது அனைத்து உறுப்பினர்களும் அறிந்ததுதான். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அண்ணன் திரு. சி.வி. சண்முகம் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு. குமரகுரு அவர்களும் தொடர்ந்து இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த புதிய மாவட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அலுவலர்கள் ஒன்றுகூடி மட்டுமே எல்லை பிரிக்கப்படுவதில்லை. இந்த ஆட்சி எல்லையை உருவாக்குவதற்காக வருவாய் நிருவாக ஆணையர் டாக்டர் சத்யகோபால், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, மாவட்ட நிருவாகத்தை உள்ளடக்கி, மக்களுடைய கோரிக்கையும் கேட்கப்படுகிறது. ஏனென்று சொன்னால், ஓர் ஆட்சி எல்லையை மறுசீரமைப்பு செய்கிறபோது, அதற்கு மக்களுடைய விருப்பம் என்பது பிரதானமாக இடம் பெற வேண்டும் என்கிற அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அந்த ஆய்வுக் கூட்டத்தை நடத்தியிருக்கிறது. நீங்கள் உட்பட, பல்வேறு மக்கள் பிரதிநிதிகள் அதிலே கலந்து கொண்டதாக வருவாய் நிருவாக ஆணையர் டாக்டர் சத்யகோபால், ஐ.ஏ.எஸ். அவர்கள் தெரிவித்தார்கள். இதனை நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களும் நேரடியாகக் கண்காணிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். ஆகவே, மக்களுடைய கருத்திற்கேற்ப, அது ஊராட்சியாக, வட்டமாக, கோட்டமாக எப்படி இணைக்கப்பட வேண்டுமோ அப்படி மக்களின் முழு விருப்பத்தைப் பெற்று அதனடிப்படையிலேதான் பிரிக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அதே கருத்தைத்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, அது ஏற்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2019 பிப்ரவரி 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன். வறுமைகோட்டிற்குக்கீழ் வாழும் சுமார் 60 இலட்சம் ஏழை குடும்பங்களுக்கு தலா 2,000 ரூபாய் சிறப்பு நிதியுதவி அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து வணங்குகிறேன்.*

பவானிசாகர் தொகுதியில் பவானிசாகர் அணை கட்டும்போது, கூலி வேலை செய்யும் தொழிலாளர்கள் தங்கி வேலை செய்வதற்காக, பொதுப் பணித் துறையால் கட்டப்பட்ட வீடுகளில், கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வரும் 100 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவும், சத்தியமங்கலம் நகராட்சி, தோப்பூர் காலனி, எம்.ஜி.ஆர். நகரில் 60 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி வாழ்ந்து வருகிற 200 குடும்பங்களைச் சேர்ந்த ஏழையெளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாவும் வழங்குமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வைத்த கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, அது தகுதியின் அடிப்படையிலே வருவாய் நிலை ஆணை 21-ன் வரையறைக்குட்பட்டு, ஒருமுறை வரன்முறைப்படுத்தல் அடிப்படையிலே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

2019 பிப்ரவரி 14]

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா எழுந்துநின்று பேச முற்பட்டார்.)

மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா (குறுக்கீடு) இதெல்லாம் முறையல்ல, மணி 11-10 ஆகிறது. கேள்வி நேரத்தில் இன்னும் 2 கேள்விகள் எடுத்துக்கொள்ள வேண்டும். (குறுக்கீடு) எந்தக் கேள்விக்கு allow பண்ண வேண்டும், யாரை allow பண்ண வேண்டும் என்பதை முடிவு செய்யவேண்டியது நான். இப்படியெல்லாம் யாரும் வற்புறுத்துவது முறையல்ல. (குறுக்கீடு) திரு. ராஜா, நீங்கள் பேசுவது முறையல்ல. (குறுக்கீடு)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா மீண்டும் எழுந்துநின்று பேச முற்பட்டார்.)

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ராஜா எப்போதும் அதுமாதிரி கேள்வியெல்லாம் கேட்க மாட்டார். அவரது தொகுதியில் கஜா புயல் ஏற்பட்டதால் கேட்கிறார். கொஞ்சம் அருள்கூர்ந்து என்னவென்று கேட்டு, வாய்ப்புக் கொடுங்கள். (குறுக்கீடு) அவர் இப்படி கேட்கக் கூடாது என்பதை ஒத்துக்கொள்கிறேன். It is not the proper way to ask such a question. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இன்றைக்கு என்னை நீங்கள் வற்புறுத்த வேண்டாம். ஏனென்றால், இன்னும் 3 கேள்விகள் இருக்கின்றன. கேள்வி நேரம் முடித்த பிறகு எதிர்க்கட்சித் தலைவர் உட்பட சில உறுப்பினர்கள் முக்கியமான சில பிரச்சினைகளை எழுப்ப வாய்ப்பு கேட்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டும். அதற்குப் பின்னால், பல அலுவல்களை நான் எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று நேரமின்மையால்தான் தர இயலவில்லை. திரு. ராஜா கேட்டால் நான் வாய்ப்புத் தந்துக் கொண்டுதான் இருக்கிறேன். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் எனக்கு இன்று நேரம் இல்லாத காரணத்தினாலே அனுமதிக்க முடியவில்லை. இதற்காக அவர் என்னிடத்திலே கோபித்துக்கொள்வது நியாயம் இல்லை. எதிர்காலத்தில் அதுகுறித்துப் பரிசீலிக்கலாம். அவ்வளவுதான். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. இது வேறு, அது வேறு. (குறுக்கீடு) இது வேறு, அது வேறு. நான் அனுமதியளிப்பது என்பது வேறு, இது வேறு.